

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மலேசியாவில் நடைபெற்ற 10வது ஆசிய பசிபிக் காதுகேளாதோர் போட்டிகளில் 4 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கல பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு வீரர். வீராங்கனைகள் நேற்று முன்தினம் (29.1.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் 17.1.2025 முதல் 21.1.2025 வரை நடைபெற்ற 69 வது ஜூனியர் தேசிய பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணி வீராங்கனைகள் நேற்று முன்தினம் (29.1.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) முகாம் அலுவலகத்தில் சென்னையில் உள்ள பிரான்ஸ் நாட்டின் துணைத் தூதர் எட்டியென் ரோலண்ட்பைக் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.1.2025) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 மாவட்டங்களில் செயல்படும் 39 விளையாட்டு விடுதிகளில் பயில்கின்ற 2,400 மாணவ – மாணவிகளுக்கு உயர்ரக ட்ராக் சூட் மற்றும் இரண்டு டிஷர்ட்டுகளை வழங்குவதன் அடையாளமாக சென்னை நேரு விளையாட்டரங்க விளையாட்டு விடுதியைச் சேர்ந்த 8 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) நவம்பர் 2024 பெங்களூரில் நடைபெற்ற உலக குதிரையேற்ற (Equestrian) கூட்டமைப்பின் உலக ட்ரெஸ்ஸேஜ் சாலஞ்ச் போட்டியின் (Federation Equestre Internationale's World Dressage Challenge) யூத் பிரிவில் தங்க பதக்கம் வென்றதன் மூலம் ஆசியாவின் சிறந்த யூத் ரைடர் (Best Youth Rider) என்ற பட்டத்தையும் உலக குதிரையேற்ற தரவரிசையில் ஐந்தாம் இடமும் பிடித்த தமிழ்நாடு வீராங்கனை செல்வி. மிராயா தாதாபோய் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், குதிரையேற்ற சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) தேசிய அளவிலான குதிரையேற்ற போட்டிகளில் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், குதிரையேற்ற சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

